செ.வெ.எண். 32/ 2021 நாள்: 17.03.2021

**திருப்பூர் மாவட்டம்.**

# தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்- 2021 வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை திருப்பூர் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருப்பூர் பல்லடம் சாலை எல்.ஆர்.ஜி அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியில், அமைந்துள்ள தேர்தல் வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை திருப்பூர் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.03.2021) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் -2021 தமிழ்நாடு முழுவதும் ஒரே கட்டமாக எதிர்வரும் 06.04.2021 அன்று தேர்தல் நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின் மூலம், தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளது. திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 101 - தாராபுரம் (தனி), 102 - காங்கயம், 112 -அவிநாசி (தனி), 113 - திருப்பூர் வடக்கு, 114 - திருப்பூர் தெற்கு, 115 -பல்லடம், 125 - உடுமலைப்பேட்டை மற்றும் 126 - மடத்துக்குளம் ஆகிய எட்டு சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் அட்டவணையின் படி வேட்புமனுக்கள் மார்ச், 12ஆம் தேதி முதல் மார்ச் 19ஆம் தேதி வரைப் பெறப்படும் எனவும், மார்ச், 20 ஆம் தேதி வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்படும் எனவும், வேட்புமனுக்கள் மார்ச், 22ம் தேதிவரைதிரும்பப் பெறலாம் எனவும்,தேர்தல் வாக்குப் பதிவு ஏப்ரல் மாதம் 06 ஆம் தேதிநடைபெறும் எனவும்,வாக்கு எண்ணிக்கை மே மாதம் 02ஆம் தேதி நடைபெறுகிறது. அதன்படி, திருப்பூர் மாவட்டத்திலுள்ள 101 - தாராபுரம் (தனி), 102 - காங்கயம், 112 - அவிநாசி (தனி), 113 - திருப்பூர் வடக்கு, 114 - திருப்பூர் தெற்கு, 115 -பல்லடம், 125 - உடுமலைப்பேட்டை மற்றும் 126 - மடத்துக்குளம் ஆகிய எட்டு சட்டமன்ற தொகுதிகளில் பதிவாகும் வாக்குகள் எண்ணும் மையம் பல்லடம் சாலை, எல்.ஆர்.ஜி.அரசு மகளிர் கலை

மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து, வாக்கு எண்ணும் மையத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பான முறையில், வைக்கப்படவுள்ள அறைகள், வாக்கு எண்ணும் அறைகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட அனைத்து முன்னேற்பாடு பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இன்று (17.03.2021) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைவாக மேற்கொள்ள வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ஜெ.ரூபன்சங்கர்ராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.முரளி, உதவி இயக்குநர் (நில அளவை) திரு.சசிகுமார், தேர்தல் வட்டாட்சியர் திரு.ச.முருகதாஸ் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**